Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | ஆடி 31 | (15 - 08 - 1992) | சனிக்கிழமை | ஓசை 179

## யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு கஷ்ட பிரதேச நிவாரணம் தேவை

வடக்கு கிழக்கிலுள்ள பாடசாலைகளை கஷ்டப் பாடசாலைகள், மிகக் கஷ்டப் பாடசாலைகள் எனப் பாகுபடுத்தி பிரகடனப்படுத்தி அதற்காக முறையே பத்து வீதம், பதினைந்து வீதம் விசேட படிகள் வழங்கப்பட வேண்டும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மத்திய, மாகாண கல்வி அமைச்சுகளைக் கேட்டுள்ளது. ஜூன் 90 தொடக்கம் வடக்கு - கிழக்கில் யுத்தம் ஆரம்பிக்கப் பட்ட நாள் தொடக்கம் போக்குவரத்து, தொலைபேசி, தபால் புகையிரத சேவை, சௌக்கிய சேவை, வங்கிச் சேவைகள் முற்றாகவோ பகுதியாகவோ பாதிப்படைந்தோ அல்லது இல்லாமலோ உள்ளன. வசதிகளை அடிப்படையாக வைத்தே பாடசாலைகள் கஷ்டப் பாடசாலைகள், மிகக் கஷ்டப் பாடசாலைகளாகக் கணிக்கப்படுவதால், தற்போதைய சூழ்நிலையை மனதிற் கொண்டு மீண்டும் பாடசாலைகளை வகுக்க வேண்டுமென சங்கம் கோரியுள்ளது.

# விரைவில் பாரிய இராணுவ நடவடிக்கை

# திட்டமிட்டபடி போர்த்திட்டம் அமுலாகும்

## புதிய தளபதிகள் பதவியேற்றதும் படையெடுப்புகள் தொடங்குமாம்

[கொழும்பு]

வடக்கில் மிக விரைவில் பாரிய இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் உறுதிபடக் கூறியுள்ளன. புதிய தளபதிகள் பொறுப்பேற்ற பின்னர், முன்னரே திட்டமிட்டபடி போர்த்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் ஜெரிசில்வா தமது புதிய கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டதும் வடக்கில் பெரும் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் உறுதிபடக் கூறியுள்ளன.

கிழக்கில் ஆயுதப்படைகளின் பிரதம தளபதியாக பதவி வகித்து வரும் ஜெரிசில்வா வடக்கிற்குஇடமாற்றபட்டுள்ளதையடுத்து, அவரது இடத்துக்கு பிரிகேடியர் லக்கி அல்கம நியமனம் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருக்கும் விடுதலைப்புலிகளின் கேந்திர நிலையங்கள் மீதான தாக்குதலுக்கு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ள போதிலும் அடுத்த மூன்று வாரங்களினுள் இவை இடம் பெறுமா என்பது பற்றிகோடி காட்ட பாதுகாப்பு வட்டாரங்கள் மறுத்துவிட்டன.

கெமுனு படைப்பிரிவைச் சேர்ந்தவரான ஜெரிசில்வா 1987ல் இடம் பெற்ற ஒப்பரேசன் லிபரேசன் நடவடிக்கையில் பங்கு கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது 52வயதான இவர் இந்திய பாதுகாப்பு அக்கடமியிலும் பயிற்சி பெற்றவர் ஆவார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவச் செலவீடு அதிகரிப்பால் நெருக்கடியில் வரவு - செலவு திட்டம்

(கொழும்பு)

பாதுகாப்பு செலவின அதிகரிப்பு, அகதிகள் பராமரிப்பு மற்றும் அரசியல் நோக்கங்களுடனான நலன்புரித் திட்டங்கள் காரணமாக இலங்கையின் வரவு செலவுத் திட்டம் பெரும் நெருக்குதல்களுக்கு உள்ளாகியிருக்கிறது என்று பெயர் குறிப்பிட விரும்பாத சிரேஷ்ட அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ராய்ட்டர் செய்தி ஏஜென்சிக்கு பேட்டியளித்த அந்த அதிகாரி மேலும் தெரிவிக்கை தங்களால் முடியாமல் இருக்கிறது

இந்த வருடம் பாதுகாப்புக்கென ஒதுக்கப்பட்ட 1530 கோடி ரூபா 1800 கோடி அல்லது 1900 கோடி ரூபாவாக அதிகரிக்கும் என எதிர்பார்க்

(4ஆம் பக்கம் பார்க்க)

## விமானப்படை கோரிக்கை அரசால் நிராகரிப்பு

(கொழும்பு)

ஆறு சரக்கு விமானங்களை கொள்வனவு செய்து தருமாறு விமானப்படையினர் விடுத்த கோரிக்கையை சிறிலங்கா அரசு நிராகரித்து விட்டதாக பெயர் குறிப்பிட விரும்பாத

ணமாகவே இக்கோரிக்கை அரசாங்கத்தினால் நிராகரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

இராணுவத் தேவைக்கென ஆறு சி-130 ஹேர் கியூலிஸ் சரக்கு விமானங்களை கொள்

## இரவு நேர ஷெல் தாக்குதல் இளம் பெண் பலி

(யாழ்ப்பாணம்)

ஒட்டுமடம், நாவாந்துறை ஆகிய பகுதிகளை நோக்கி தீவகத்தில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் நடாத்திய எறிகணைத் தாக்குதலில் இளம் பெண் ஒருவர்கொல்லப்பட்டுள்ளார். ஐந்துபேர் காயமடைந்துள்ளனர்

நேற்று இரவு 8 45 மணியளவில் நடாத்தப்பட்ட இத்தாக்குதலின்போது ஒட்டுமடம் ஒஸ்மானியாக் கல்லூரிக்கு அண்மையிலும் நாவாந்துறைப் பகுதியிலும் பல எறிகணைகள் வீழ்ந்துவெடித்தன.

இத்தாக்குதலில்இராசரத்தினம் கவிதா (வயது 16) என்ற இளம் பெண் கொல்லப்பட்டுள்ளார். பத்தினாதர் கவாஸ்க்கர் (வயது 3) என்ற குழந்தை பலத்த காயமடைந்து ஆபத்தான நிலையில் உள்ளார்.

மேலும் ப. மங்கயற்கரசி (வயது 34), இ. தயாளினி

(4ஆம் பக்கம் பார்க்க)

## மைலந்தனை சம்பவத்தில் 13 சிறுவர் படுகொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் மைலந்தனையில் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் விபரங்கள் தெரியவந்துள்ளன.

இச்சம்பவத்தில் 13 சிறுவர்கள், 10 பெண்கள் உட்பட 34 பேரின் பெயர் விபரங்கள் தெரியவந்துள்ளன. இவர்களில் ஐந்து குடும்பங்களைச் சேர்ந்த ஒன்றுக்கு மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் 24 பேர் கொல்லப்பட்டதாகவும், 10 பேரைக்காணவில்லை எனவும் 10 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால்நேற்று முன்தினம் இப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட சடலங்கள் காணாமல் போனோர் என கருதப்படுவோரின் சடலங்க

(4ஆம் பக்கம் பார்க்க)

## பெருமளவு மக்கள் இரவிரவாக இடம் பெயர்வு

[யாழ்ப்பாணம்]

ஒட்டுமடம், நாவாந்துறை, கொட்டடி, ஆகிய யாழ். நகரை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இடம் பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றனர்.

நேற்று இரவு நடைபெற்ற எறிகணைத் தாக்குதலைத் தொடர்ந்து மேற்படி பகுதிகளைச் சேர்ந்த பெருமளவு

(4ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் ராஜதந்திரத்திற்கு

ராய்ட்டர் செய்தி ஏஜென்சிக்கு பேட்டியளித்த அந்த அதிகாரி மேலும் தெரிவிக்கையில்;

எதிர்பாராத வகையிலான இந்தச் செலவினங்களினால் ஏற்கனவே செய்த கணிப்பீடுகளின் பிரகாரம் செயற்பட

கோரிக்கையை சிறிலங்கா அரசு நிராகரித்து விட்டதாக பெயர் குறிப்பிட விரும்பாத அரச அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நிதிப் பற்றாக்குறை கார

இராணுவத் தேவைகளுக்கென ஆறு சி-130 ஹேர் கியூலிஸ் சரக்கு விமானங்களை கொள்வனவு செய்ய வேண்டுமென விமானப்படையினர் கோரிக்கை விடுத்திருந்தனர் என அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தென்னிலங்கையில் நெருக்கடி நிலை உசார் நிலையில் பொலிசார்

(கொழும்பு)

கனத்தை மயானத்தில் இராணுவத்தினரின் இறுதிக் கிரியைகளுக்குப் பின்னர் ஏற்பட்ட அசம்பாவிதங்களை அடுத்து நாடளாவியரீதியில்பொலிசார் உஷார்ப்படுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில் பொலிசார் நிலைமைகளை உன்னிப்பாக அவதானிப்பதாகவும், தேவைப்படுமிடத்து சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

கனத்தை மயானத்தில் அண்மையில் ஏற்பட்ட சம்பவத்தில் பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த ஆறு வாகனங்கள் உட்பட தனியாருக்கு சொந்தமான பல வாகனங்கள் சேதமாக்கப்பட்டதாக தெரியவருகிறது. மேலும் ஆளுங்கட்சி பிரமுகர்கள், அமைச்சர்கள் உட்பட எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் சிலரும் தாக்கப்பட்டுள்ளனர்.

மேலும் ஒரு சில இடங்களில்

(4ஆம் பக்கம் பார்க்க)

# கனத்தை மயான குழப்பம்; சு. க. பிரமுகர் தேடப்படுகிறார்

(கொழும்பு)

கடந்த திங்கட்கிழமை கனத்தை மயானத்தில் நடந்த குழப்பம் தொடர்பாக விசாரணை நடத்தி வரும் பொலிசார் சுதந்திரக் கட்சி தொழிற் சங்கப் பிரமுகர் ஒருவரை தேடி வருகின்றனர் என்று கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவரை விரைவில் விசாரணைக்கு உட்படுத்தலாம் என்றும், ஆனால் அவர் வழமையாக தங்கும் இல்லத்தில் அவர் இப்பொழுது தங்குவதில்லையாதலால் பொலிசார் அவருடன் இன்னமும் தொடர்பு வைக்க முடியாதுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழப்பம் நடந்த பொழுது லெப். ஜெனரல் கொப்பேகடுவவின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்ட அமைச்சர் ஒருவர் மேற்குறிப்பிட்ட தொழிற்சங்க வாதியை நெருங்கி குழப்பக்காரரை அமைதிப் படுத்துமாறு கோரியிருந்தார் என்றும், அதற்கு தொழிற்சங்கவாதி 'அது நம்முடைய ஆட்கள் இல்லையே' என்று கூறி தப்பித்துக் கொண்டதாகவும் பொலிஸ் விசாரணையை அடுத்து தெரியவந்துள்ளது.

## கொப்பேகடுவ குடும்பம் காயமடையவில்லை

(கொழும்பு)

லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் இறுதிச் சடங்குகளின் போது நிகழ்ந்த அசம்பாவிதங்களால் தமது குடும்ப உறுப்பினர் எவரும் காயமடையவில்லை என்று கொப்பேகடுவ குடும்பத்தினர் கூறியுள்ளனர்.

கடந்த செவ்வாயன்று அரச சார்பு தினசரியொன்றில் பதில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஜோன் அமரதுங்காவும், அவருக்கு சமீபமாக இருந்த கொப்பேகடுவ குடும்ப உறுப்பினர் சிலரும் காயமடைந்ததாக செய்தி வெளியிட்டிருந்ததைத் தொடர்ந்தே அவர்கள் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளனர்.

லெப். ஜெனரல் டென்சில்

(4ஆம் பக்கம் பார்க்க)

# பலியான பிரேமதாசா அரசு

(கொழும்பு)

பிரேமதாசா அரசாங்கத்தை ஏமாற்றி இந்திய இராணுவத்தை விடுதலைப்புலிகள் வெளியேற்றினர். இதன் மூலம் சிறிலங்கா அரசின் ராஜதந்திரத்தை விடுதலைப் புலிகள் கச்சிதமாக வெற்றி கொண்டனர். இவ்வாறு சிறி

## வீரச்சாவு



வீரவேங்கை தங்கம்

20-05-92 அன்று தெல்லிப்பழைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் விழுப்புண் அடைந்திருந்த விடுதலைப்புலிகள் போராளியான வீரவேங்கை தங்கம் (காளிமுத்து ரஞ்சன், திருக்கோணமலை) 12. 08. 92 அன்று வீரச்சாவு அடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## இந்திய ராணுவ வெளியேற்றமே அழிவுக்கு காரணம் என்கிறார் ஜே ஆர்.

லங்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனா அவுஸ்திரேலிய வானொலிக்கு அளித்த விசேடபேட்டியொன்றில் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், ''இந்திய இராணுவத்தினரை நாட்டிலிருந்து அவசரப்பட்டு வெளியேற்றியதன் விளைவே எமது இராணுவ உயரதிகாரிகளது இழப்பாகும்''

எமது இராணுவ வீரர்களதும், அதிகாரிகளதும் தேவையற்ற உயிரிழப்புக்களைத் தவிர்க்கவே 1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினரை வரவழைத்தேன். இதன் மூலம் சிங்கள மக்களது அநியாய உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டன.

1987 ஆம் ஆண்டு ''ஒபரேசன் லிபரேசன்'' இராணுவ நடவடிக்கையின் மூலம் குடாநாட்டின் ஒரு சிறு பகுதியைக் கூட இராணுவ கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியாமல் போய்விட்டது. அந்தக் காலப்பகுதியிலேயே இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள

(4ஆம் பக்கம் பார்க்க)

## தற்காலிக தளபதி றோகன்டல் வத்த

(கொழும்பு)

லெப். ஜெனரல் டென்சில் கொப்பேக்கடுவவின் மரணத்துக்குப் பிறகு பிரிகேடியர் றோகன் டல்வத்த பதில் கடமைகளைப் புரிந்து வருகிறார்.

வட பிரதேச இராணுவ நடவடிக்கைகளுக்கு பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கும் மேஜர்ஜெனரல் ஜெரி சில்வா கடமையைப் பொறுப்பேற்கும்வரை பிரிகேடியர் றோகன் தற்காலிகமாக பணியாற்றுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது

## சமூகவிரோதி சுட்டுக்கொலை

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து காளிகோவிலடிக்குச் சென்ற ரெலோ இயக்க சமூகவிரோதி பூபாலப்பிள்ளை நாகலிங்கம் என்பவர் ஞாயிறு காலை சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவர் பட்டிருப்பு களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்தவர் என தெரியவருகிறது.

## ஜெயமஹாவின் இடத்திற்கு கொமடோர் சிசில் திசேரா

(கொழும்பு)

வட பிராந்திய சிறிலங்கா கடற்படைத் தளபதியாக கொமடோர் சிசில் திசேரா நியமிக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மறைந்த ரியர் அட்மிரல் மொஹான் ஜெயமஹாவின் இடத்திற்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## ரயில்வே வேலைத்தளத்தில் 48 இலட்சம் கொள்ளை

ஆயுதம் ஏந்திய கோஷ்டி ஒன்று இரத்மலானை ரயில்வே வேலைத் தளத்தில் நாற்பத்தெட்டு இலட்சம் ரூபா சம்பளப்பணத்தைக் கொள்ளை அடித்துச் சென்றுள்ளது.

கொள்ளைக்காரரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இரண்டு காவல் அதிகாரிகள் கொல்லப்பட்டனர். மற்றும் ஐந்து பேர் காயமடைந்தனர்.

நேற்று ரயில்வே திணைக்கள பொறியியல் பிரிவினரின் சம்பள தினமாகும். சம்பளத்தை எடுத்துக் கொண்டு வந்த வாகனம் இரத்மலானை பொறியியல் வேலைத் தளத்தில் நுழைந்தபோது இக்கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றது.

**வனத்தை வளர்த்து வனப்பைப் பெருக்கு**

## வரி விளம்பரம்

### வாங்கலாம் விற்கலாம்

உங்கள் கடிகாரங்கள் பழையன வாகி விட்டனவா? கவலையை விடுங்கள். உங்கள் கடிகாரங்கட்கு நியாயவிலை போட்டு புதியன வழங்க தயாராகவுள்ளோம். மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். இன்றே எம்மை நாடுங்கள். டில்கா வாச் வேக்ஸ், ஸ்ரான்லி வீதி. (பழைய விகாரை முன்பாக) யாழ்ப்பாணம். (3008)

### ஒலிப்பதிவு நாடாவுக்கும் தடை

(வவுனியா)

வடபகுதி நோக்கி ஒலிப் பதிவு நாடா கொண்டு செல்லப்படுவது சிறிலங்கா இராணுவத்தால் தடைசெய்யப் பட்டது.

கடந்த 11 ஆம் திகதி தாண்டிக்குளம் சோதனை முகாம் இராணுவத்தால் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது. அன்றைய தினம் மக்கள் கொண்டு வந்த ஒலிப்பதிவு நாடாக்கள் இராணுவத்தால் பறிமுதல் செய்யப்பட்டன. (தி)

### இன்று

கைதடி மத்தி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் பொன்விழா இன்று சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ். கைதடி முத்துக்குமார சுவாமி மகாவித்தியாலயத்தில் சங்கத் தலைவர் திரு. வ. சுப்பையா தலைமையில் நடைபெறும்.

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. செ. லிங்கநாதன் பிரதம விருந்தினராகப் பங்குபற்ற உள்ளார்.

கைதடி—நாவற்குழி வட்டவைப் பொறுப்பாளர் திரு. ப. தமிழன் மங்கள விளக்கேற்றிப் ''பொன் விழாவை'' சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்து வைப்பார் எனச் சங்கச் செயலாளர் திரு செ. இராசையா தெரிவித்துள்ளார். (24)

★ ★

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ கால தெய்வீக இசையரங்கில் இன்றைய நிகழ்ச்சியின் பாடலை வி சிவஞானசேகரம் அவர்கள் பாட உள்ளார். இவருக்கு பக்கவாத்தியக் கலைஞர்களாக வயலின் வி கே குமாரசாமியும் மிருதங்கம் எஸ் மகேந்திரன் அவர்களும் பங்கேற்க உள்ளனர்.

★ ★

(பருத்தித்துறை)

புலோலி சிங்கை நகர் அறவழிப்பாலர் பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி திரு. ஜீ தங்கவேல் தலைமையில் சிங்கைநகர்

---


இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ். கிளை, தலைமையகம்

### அதிர்ஸ்ட இலாபச் சீட்டு

இலங்கை செஞ்சிலுவைச் சங்க, யாழ் கிளையின் பிரிவுகளில் விற்பனை செய்யப்படுகின்ற அதிர்ஸ்ட இலாபச் சீட்டின் குலுக்கல் திகதி 15-08-1992 ஆம் திகதியிலிருந்து 30-09-1992 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றேன்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
13-08-1992

ஏ. சீ. செபநாயகம்
தலைவர்
(இடைக்காலப்)

(சி/ 4892)


---

## ஓராண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை சூரியகலா

(குமுதினி நடராஜா)

தாயின் மடியில் 22-11-1975

தாயக விடிவில் 27-07-1991

திதி: 15-08-1992

ஆ. க. வெளி இராணுவ நடவடிக்கையின் போது கட்டைக்காட்டில் தரையிறங்கிய இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்.

எல்லையை எதிரி தொடுகின்ற போதினில்
எரிமலையாகி நின்றாள் — இவள்
அலையெனப் பகை எழுந்திட்ட போதும்
அஞ்சுதல் மாட்டோம் என்றாள் — கலா
அன்னை நிலமிது அடிமைப் படவோ
என்றே ஆவி துறந்தாள்.

இவருடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

செல்வா மில் றோட்,
கரவெட்டி.

—குடும்பத்தினர்

(3018)

---


யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

பின்வரும் பதவிகளுக்கு

தற்கால மேற்கத்திய மெய்யியல்
பொது உளவியல்
சமய மெய்யியல்
பழைய ஏற்பாட்டியல்
புதிய ஏற்பாட்டியல்
கிறிஸ்தவ மெய்யியல்
திருச்சபை வரலாறு
கிறிஸ்தவ வழிபாட்டியல்
தமிழ் (சித்த மருத்துவம் பற்றிய அறிவுடன்)
மீன்பிடிப் புவியியல்


---


## அரசாங்க அறிவித்தல்

சுகாதார சேவைகள் திணைக்களம்
யாழ்ப்பாணம்

### கேள்விப் பத்திரம் கோரல்

இலக்கம் 57 விக்டோரியா வீதியில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் 14 அடி நீள, அகலமும் 8 அடி உயரமும் கொண்ட கொட்டகை ஒன்று அஸ்பெஸ்ரனி சீட் கூரையுடன் அமைப்பதற்கு இப் பணிமனையில் பதிவு செய்யப்பட்ட கட்டிட ஒப்பந்தக் காரரிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் 28-08-92 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு பிந்தாமல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் விபரங்களுக்கு மேற் காணும் முகவரியில் சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளவும்.

டாக்டர் கொ. இரத்தினசபாபதி,
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்.
07-08-92.

(சி/4887)


---

## 45-ம் நாள் நினைவஞ்சலி



### வீரவேங்கை சேரன்

(சிவஞானம் அன்ரனிசில்)

முள்ளியான், கட்டைக்காடு

வீரஜனனம்

வீரச்சாவு 29 · 06 · 1992

தியாகத்தின் தீபமே
மறைந்து விடா உனது ஒளி
திறங் கொண்ட நெஞ்சினனே
மறைந்தாயோ எம்மை விட்டு
கட்டை நகர் தனிலே
உரமிட்ட உன் குருதி
நனைத்து விடும் தமிழருக்காய்
வரங்கேட்டு நிற்கின்றோம்
வா நண்பனே! என் சேரனே!

பள்ளிதனை நீ மறந்தாய்
அள்ளி உண்ணும் ஊண் மறந்தாய்
பள்ளி கொள்ள மறந்துவிட்டாய்
புலிகளுடன் இணைந்து கொண்டாய்
எதிரிகளை அழிப்பதற்கு துணிந்து சென்றாய்
நள்ளிரவில் நன்குழைத்தாய்
துள்ளி நீ ஈட்டிய தியாகத்தின் வெற்றிகளை
எண்ணிய உடன் சென்மேரிஸ் கழகத்தினர்

---

## தமிழர் போராட்டத்திற்கு யுத்தம் தீர்வாகாது

- விக்கிரமபாகு

(கொழும்பு)

தமிழ் மக்களது போராட்டத்தை முடிவுக்குக்கொண்டு வருவதற்கு யுத்தமும் ஒடுக்கு முறையும் தீர்வாகாது. இதற்கு அரசியல் தீர்வே அவசியமாகும் என மறைந்த மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ வலியுறுத்தியிருக்கிறார். அரசியல், சமூக, பொருளாதார அரசியல் பின்னணிகள் இந்த கிளர்ச்சிக்கு பின்னாலிருப்பதாக துணிச்சலுடன் கருத்து வெளியிட்டவர் அவர் என நவ சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் விக்கிரமபாகு தெரிவித்துள்ளார்.

டென்சில் கொப்பேகடுவவின் மறைவு குறித்து இக்கட்சி விடுத்துள்ள அறிக்கையிலேயே இதனை விக்கிரமபாகு தெரிவித்துள்ளார்.

வடக்கில் இடம்பெற்றுவரும் அர்த்தமற்ற யுத்தத்துக்கான முழுப்பொறுப்பையும் அரசாங்கமே ஏற்க வேண்டும் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் சகல சமூகங்களையும் சேர்ந்த 50,000க்கும் அதிகமான மக்கள் இதில் கொல்லப் பட்டிருக்கிறார்கள்.

இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் இதில் சம்பந்தப் படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

ஜனநாயகத்தையும் அமைதியையும் விரும்பும்மக்கள்போருக்கு எதிராக குரல் எழுப்பி, தமிழ்மக்கள் சுயநிர்ணய உரிமையுடன் வாழவழி செய்திட வேண்டுமென அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீர ஜனனம் 22 | 03 | 1976



வீரச் சாவு 28 | 07 | 1991

ஆனையிறவுப் போரில் வீரச்சாவைத் தழுவிய

### வீரவேங்கை அனுஷா

(குமாரசாமி - ஜெசிந்தா)

திதி: 15. 08· 1992

மண்ணவர் படும் துயரங்கண்டு
மனமிரங்கி மண் மீட்பிற்காக
பாசமதை மறந்து துணிவுடன்
பாசறை சென்ற எம் பைங்கிளியே
ஓராறு மாதந்தன்னில் பயிற்சியை
முடித்துவீரவேங்கையாகி ஆனையிறவுப் போர்க்களத்தில்
மாற்றான் ஏங்கிடப் போர்புரிந்து
மடிந்திட்ட எம் குலக்கொழுந்தே
இன்று நீ எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு ஆகுதம்மா
ஏழாண்டு சென்றாலும் வற்றாதம்மா எம்கண்ணீரூற்று
விண்ணிலிருந்து வருவாயம்மா மீண்டும் எம்மிடையே
உன் வரவை எதிர்பார்க்கும்.

களபாவோடை,
ஏழாலைதெற்கு,
ஏழாலை.

அப்பா, அம்மா,
அக்காமார், அத்தான்மார்.

(3017)

---

## நினைவு கூருகின்றோம்

டாந்த இல்ல விளையாட்டுப் போட்டி திரு. ஜீ தங்கவேல் தலைமையில் சிங்கைநகர் மாவீரர் மைதானத்தில் 15-ம் திகதி இன்று நடைபெறுகின்றது. இவ்விளையாட்டுப் போட்டியிலே வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் திரு. ச. முருகேசபிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்குவார். (25)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையினால் நடத்தப்படும் யாழ் மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்விப் பயிற்சித் திட்டத்தின் மாவட்ட மட்ட கருத்தரங்கு 19-8-92 புதன் கிழமை மணிக்கூட்டு வீதியில் உள்ள யாழ் மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் இச் சபையின் மகளிர் குழுத்தலைவி திருமதி கு. சிவராசா தலைமையில் நடைபெறும். (22)


**A/L 93**

**P PIR CL SS**

12 - 01 - விலங்கியல்
01 - 02 - இரசாயனவியல்
02 - 03 - பௌதிகவியல்
03 - 04 - தாவரவியல்

ஆரம்பம் :

✓6 - 08 - 1992

(ஞாயிறு நண்பகல் 12,00மணிக்கு)

எமது வழமையான ஆசிரியர் குழுவினால்

NEW MASTER INSTITUTE
B. M. C. Lane,
JAFFNA..

(சி,4886)


### பல்கலைக் கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்துவிண்ணப்பங்கள் 1992. 09. 18 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

பதவிகள் -

1) தற்காலிக உதவி விரிவுரையாளர்
- கிறிஸ்தவ நாகரிகம்
- நாடகமும் அரங்குக் கலைகளும்
- நுண்கலை
- பொருளியல்
- அரசறிவியல்
- மெய்யியல்
- இந்துநாகரிகம்
- புவியியல்
- தமிழ்
- ஆங்கிலம்
- தொழில் நிர்வாகம்
- வர்த்தகம்
- சித்த மருத்துவம்
- ஆற்றுகைக்கலை - கர்நாடக சங்கீதம் / வாய்பாட்டு
- ஆற்றுகைக்கலை- கர்நாடகசங்கீதம்/ வாத்தியங்கள் ஆற்றுகைக் கலை - நடனம்/பரதநாட்டியம்

2) தற்காலிக கட்டுரை ஆசிரியர்
- புவியியல்
- வரலாறு

3) தற்காலிக போதனாசிரியர்
- ஆங்கிலம் - தரம் II
- பரதநாட்டியம்
- கர்நாடக வாய்பாட்டு
- மிருதங்கம்
- வயலின்
- வீணை

4) இடைவரவு விரிவுரையாளர்
- வர்த்தககைத்தொழிற் சட்டம்
- சட்டச் சூழல்
- கணக்கியல்
- கணக்காய்வு
- வரி விதிப்பு
- வங்கியியல்
- கிரேக்க, மத்தியகால மெய்யியல் பற்றிய அறிவுடன்)
- மீன்பிடிப் புவியியல்
- பிரான்சிய மொழி
- நாடகமும் அரங்குக்கலைகளும் - (வேடப்புனைவு, நடிப்புக்கொள்கைகள், ஒளி, மரபுவழி நாடகம்)

5) இடைவரவு போதனாசிரியர்
- பாரம்பரிய கைவினைகள்
- நவீன ஓவியம்தீட்டுதல்/ கட்டிடக்கலை

6) தற்காலிக செய்முறை காட்டுநர் சித்த மருத்துவம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப்பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் இதர விபரங்களையும் பெற விரும்புபவர்கள் 23X10 சதம மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு 2 - முத்திரை யொட்டப்பெற்ற தபால் உறையை அனுப்புதல் வேண்டும்.

விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கவிரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப்
பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி.
1992. 08. 12

(சி-4888)

நள்ளிரவில் நன்குழைத்தாய்
துள்ளி.நீ ஈட்டிய தியாகத்தின் வெற்றிகளை
எண்ணிய உடன் சென்மேரிஸ் கழகத்தினர்
கண்ணீரால் பூக்கள் சிந்திப்போடுகிறோம் பூமாலை
உன்னுடன் களத்தில் மடிந்த சகல மாவீரர்களுக்கும்
சென்மேரிஸ்கழகத்தினர் அஞ்சலிசெலுத்தி நிற்கின்றோம்.
வேங்கையனே சேரா உன்
சிறப்பினை நாம் பாடிப் பாடிச் சோர்ந்தே போனோம்.

கண்ணீர் அஞ்சலி செலுத்தி நிற்கும்
சென்மேரிஸ் வி.க உறுப்பினர்கள்

கட்டைநகர்,
முள்ளியான். (2991)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரஜனனம்

06 - 11 - 1971



வீரச்சாவு

05 - 08 - 1990

## வீரவேங்கை அனிபா

( வடிவேலு உதயகாந்தன் )

05 - 08 - 1990 அன்று நடந்த கோட்டைத் தாக்குதலில் வீரச்சாவடைந்தார்.

**திதி: 14 - 08 - 1992**

கோட்டையில் கொடியை ஏற்றி
நாட்டிடுவோம் நம்தேச விடுதலையை என்றே
காட்டிய தீரத்தால் உதிரம் பாய
ஓட்டினாய் பகைவரை என மகிழ்ந்தோம்!
உடலது மறைந்தாலும் உன் நினைவு பதிந்த
தடங்கள் மறையாது! தொடரும்பயணத்தில் . , . .

மட்டுவில் வடக்கு, - குடும்பத்தினர்
சாவகச்சேரி.
( 2997 )

## நினைவு கூருகின்றோம்...
## 1992 - 08 - 15

1986 ஆம்ஆண்டு இதேதினத்தில் திருக்கோணமலை, சாம்பல்தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் விழுப்புண் அடைந்த போராளியை வாகனத்தில் ஏற்றிவரும் போது நிலாவெளிப் பகுதியில் தவறி விழுந்ததில் எமைப்பிரிந்த-

**சீலன்** (இலட்சுமணப்பெருமாள் இலட்சுமசீலன் - உவர்மலை, திருக்கோணமலை)

1988 ஆம் ஆண்டு இந்தியப் படையினராற் சுட்டுக் கொல்லப்பட்ட விவசாயப் போதனாசிரியர்.

1989 ஆம் ஆண்டு மட்டக்களப்பு பாவற்குடிச்சேனைப் பகுதியில் வீரச்சாவெய்திய -

**மகாராஜன்** (வெ. தட்சணாமூர்த்தி - மட்டக்களப்பு)

திருக்கோணமலை-பன்குளம் பகுதியில்,இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்தி -

**பவான்** (நடராசா சரவணபவான் - சாம்பல்தீவு, திருக்கோணமலை)

1990 ஆம் ஆண்டு அம்பாறை-அக்கரைப்பற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**வாசு** (க. உதயகுமார் - வினாயகபுரம், அம்பாறை)

**மேஜர் சிந்து** (சித்திரவேல் தேசிகன் - கிரான், மட்டக்களப்பு)

திருக்கோணமலை- தம்பலகமம் பகுதியில்,சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**அமலன்/கமலன்** (நடராசா கிருஸ்ணமூர்த்தி- வில்பற்றுக்குறோஸ்)

மட்டக்களப்பு - பெரியபுல்லுமலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது சுட்டுக் கொல்லப்பட்ட 2- தமிழர்கள். ஏறாவூர்ப் பகுதியில், முஸ்லிம்காடையர்களினால் கடத்திச்செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட மாணவனாகிய வாழைச்சேனை, புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தமிழ் இளைஞன் - இனந்தெரியாத குழுவொன்றினால் படுகொலை செய்யப்பட்ட உறுகாமத்தைச் சேர்ந்த தமிழ் விவசாயி.

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சிறிலங்கா காவல் துறையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 13-ம் கிராமத்தைச் சேர்ந்த தமிழ் விவசாயி.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/4892]

## சிந்தனைக்கு

ஓர் அடிமை தன்விலங்குச் சங்கிலிகளில் பெருமை கொள்ளத் தொடங்கி, பொன்னான அணிகலன்கள் போல் அவற்றைத் தழுவும்போது அடிமையின் எசமான் பெறும் வெற்றி முழுமையாகிவிடும்.

- மகாத்மாகாந்தி


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 15-08-1992

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308

த. பெ. எண் - 05


# எஜமானார் விசுவாசம்

அராலிக் கண்ணி வெடித் தாக்குதலில் சிக்கி மரணமடைந்த லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விஜய விமல ரெட்ணா, வடபகுதிக் கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் ஜெயமஹா உட்பட ஒன்பது அதிகாரிகளுக்கும் அஞ்சலி தெரிவித்தும், அஞ்சலி தெரிவிக்குமாறும் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் துண்டுப் பிரசுரங்களும், பத்திரிகைச் செய்திகளும் விடுத்துள்ளன. அத்தோடு வவுனியாவில் சிங்கள இராணுவத்துடன் சேர்ந்து அஞ்சலி செலுத்துமாறு தமிழ் மக்களை மிரட்டியதோடு அங்கு நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் பெருமளவில் பங்குபற்றுமாறு வற்புறுத்தியும் வருகின்றனர்.

இத் தமிழ்க் குழுக்கள் யாருக்கு தமிழ் மக்கள் அனுதாபம் தெரிவிக்க வேண்டும் என இவ்வாறு கூக்குரல் இடுகின்றனர்? தமிழ் மக்களின் நண்பர்கள் என்று யாரை கூறுகின்றார்கள்?

கொல்லப்பட்ட இராணுவ அதிகாரிகள் அனைவரும் இனப்படு கொலைக்குக் காரணமாக இருந்தவர்கள். தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்க வேண்டும் என்பதில் குறிப்பாகச் செயற்பட்டவர்கள். திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத் திட்டங்களுக்குப் பாதுகாப்பாக இருந்தவர்கள்.

மேஜர் ஜெனரல் விஜயவிமலரெட்ணா (இறக்கும் போது பிரிகேடியர்) கிழக்கிலும், வடக்கிலும் நடந்த படுகொலைகள் பலவற்றிற்குக் காரணமானவர். கிழக்கில் முதலாம் ஈழப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் நிகழ்ந்த தங்கவேலாயுதபுரம் படுகொலையில் இருந்து கொக்கட்டிச்சோலை செரண்டிப் இறால் பண்ணைப் படுகொலைகள் வரை தலைமை தாங்கி 'புகழ்பூத்த தளபதி' ஆவார். அத்தோடு 1990 ஆம் ஆண்டு மண்டைதீவில் இடம் பெற்ற படுகொலைகளுக்கும் படைகளை வழிநடத்தி வந்தவராவார். அதாவது தமிழரின் இரத்தத்தில் மூழ்கி எழுந்த விஜய விமலரெட்ணாவிற்கு அஞ்சலி செலுத்தக் கோருகின்றார்கள் இத் தமிழ்க் குழுக்கள்

இன்று சிங்கள இராணுவத்தின் இனஅழிப்பு நடவடிக்கைகளுக்குத்துணைபோகும்தமிழ்க் குழுக்கள் லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ அரசியல் தீர்வை நாடி நின்ற இனமத பேதமற்ற இராணுவ தளபதி என புகழாரம் சூட்டுகின்றார்கள்

# வட-கிழக்கு விவகாரத்தில் பொதுவான முடிவுவேண்டும்

## - நவசமசமாஜக் கட்சி வற்புறுத்து

(கொழும்பு)

''எதிர்க்கட்சிகளால் பொது முன்னணி ஒன்று அமைக்கப்படும் பட்சத்தில் அது ஐக்கிய தேசிய கட்சியினை முறியடிப்பதனை மாத்திரம் நோக்கமாகக் கொண்டிராது உறுதியான பொருளாதார திட்டம் என்பவற்றுடன் வடக்கு கிழக்கு யுத்தம், வடக்கு கிழக்கு இணைப்பு, தனியார் மயப்படுத்தல் போன்ற விடயங்களிலும் பொதுவானதொரு நிலைப்பாட்டினை கொண்டிருக்க வேண்டியது அவசியம்.''

இவ்வாறு நவசமசமாஜக் கட்சியின் பிரதிநிதிகள் பி.டி. சொர்ணபாலா, திருநாவுக்கரசு ஆகியோர் கேட்டுள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி, சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, நவசமசமாஜக் கட்சி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஆகிய எதிர்க்கட்சிகளது தலைவர்களின் கூட்டம் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தலைமையில் அண்மையில் கூடிய போது இவர்கள் அந்த வேண்டுகோளை விடுத்தனர். இக் கூட்டத்தில் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட முக்கிய அம்சங்களாவன;

யாழ்ப்பாணம் மீது எந்த நேரத்திலும் இராணுவ ரீதியான பாரியதொரு தாக்குதலைச் செய்ய அரசாங்கம் எண்ணியுள்ளதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன இதன் காரணமாக பல்லாயிரக்கணக்கில் அப்பாவி குடிமக்களது உயிர்கள் மிகக் குறுகிய காலத்திற்குள் பறிக்கப்படக் கூடிய பேராபாயம் தோன்றியுள்ளது. இத்துடன் அத்தியாவசிய பொருள்கள் விநியோகம் சீராக இல்லாமை காரணமாக பாதிக்கப்பட்டிருக்கும் மக்களது அன்றாட வாழ்க்கை முழு அளவில் பாதிப்புக்குள்ளாகும்.

இராணுவத்தினருக்கும் அநியாயமான உயிரிழப்புக்கள், சேதங்கள் ஏற்படும். எனவே அழிவுகரமான இந்த யுத்தத்தை நிறுத்தவேண்டும்.

யுத்தத்தை தொடர்வதனால் பாதுகாப்புக்கான செலவுகள் மிகப் பெருமளவில் அதிகரித்து வருகின்றன

வடக்கு - கிழக்கில் பேரழிவினை ஏற்படுத்தும் இந்தயுத்தத்தினால் உண்டாகும் செலவினங்களின் பளு நாட்டின் முழு சனத்தொகையினர் மீதே சுமத்தப்படும். இன்று வாழ்க்கைச் செலவு உயர்ச்சியினால் கடும் வறுமை நிலைக்கு தள்ளப்பட்டிருக்கும் நாட்டு மக்கள் பட்டினி கிடக்கவே நேரிடும்.

எனவே யுத்தத்தினால் ஏற்படக் கூடிய அபாயகரமான விளைவுகளை மனதிற் கொண்டு, இதனை உடனடியாக நிறுத்தும் வகையில் சகல கட்சிகளும் ஒன்றுபட்டு செயற்படவேண்டும்.

### தாண்டிக்குளம் சோதனைச் சாவடியில்

# கொப்பேகடுவ படத்திற்கு அஞ்சலி செய்ய வற்புறுத்து

(வவுனியா)

மரணமடைந்த இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் உருவப்படம் வைக்கப்பட்டு அப்படத்திற்கு அஞ்சலி செலுத்தும்படி தமிழ்ப் பயணிகளை இராணுவத்தினர் நிர்ப்பந்தம் செய்கின்றனர்.

தாண்டிக்குளம் இராணுவ சோதனைமுகாமில் வைக்கப்பட்டுள்ள மறைந்த தளபதியின் உருவப்படத்திற்கே அஞ்சலி செலுத்தும்படியே நிர்ப்பந்தம் கொடுக்கப்படுகிறது.

மேற்படி தளபதியின் உடல் அடக்கம் செய்யப்பட்ட தினப் வவுனியா நகரமக்களை வெள்ளைக்கொடி கட்டும்படி இராணுவத்தினரும் பொலிசாரும் கட்டாயப்படுத்தினர் என்றும் சொல்லப்பட்டது.

வவுனியா நகரமக்கள் இராணுவ, பொலிஸாரின் துப்பாக்கிகளுக்கு பணிந்து செல்ல வேண்டிய நிலையில் இருப்பதாக நகரத்திலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (தி)

# தென்மராட்சிப் பகுதியில் 4 உப நூல் நிலையங்கள்

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேச செயலாளர் பகுதியில் நான்கு உப நூல் நிலையங்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மறவன்புலோ, நாவற்குழி,

பிரதேச செயலர் பூ. சுந்தரம்பிள்ளை அவர்கள் தலா பத்தாயிரம் ரூபா வழங்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை பொதுமக்கள் தாமாக முன்வந்து தமது பகு

# ஜனதா தள் கட்சியின் பிளவு; நரசிம்மராவ் மீது குற்றச்சாட்டு

(டில்லி)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் வி. பி. சிங் தலைமையிலான ஜனதா தள் கட்சியிலிருந்து இருபது பாராளுமன்ற உறுப்பினர்கள் விலகிச் சென்று புதிய கட்சி ஒன்றை அமைத்திருப்பது இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சிகள் மத்தியில் பெரும் பலவீனம் ஏற்பட்டுள்ளதை எடுத்துக் காட்டுகிறது அதே வேளை பிரதமர் நரசிம்மராவே இப்பிளவிற்குக் காரணம் என ஜனதா தளம் குற்றம் சாட்டியுள்ளது.

சிறுபான்மை அரசாக இருந்து ஆட்சி செய்யும் நரசிம்மராவின் காங்கிரஸ் அரசிற்கு ஜனதா தள் ஆட்சியில் ஏற்பட்டுள்ள இந்தப் பிளவு பெருமளவிற்கு துணைபுரியும் ஒரு அம்சமாகவே உள்ளது. அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போதும் இந்த அதிருப்தியாளர் குழு காங்கிரஸ் அரசிற்கு ஆதரவாகவே வாக்களித்திருந்தது.

இதேநேரம் அஜித்சிங் தலைமையிலான வெளியேறிய குழுவினர் தம்மை தனியான ஒரு அரசியல் குழுவாக அங்கீகரிக்குமாறு லோக்சபா சபாநாயகர் சிவராஜ் பாட்டீலை சந்தித்து வேண்டுகோள் விடுத்திருந்தனர். இது தொடர்பான கடிதம் ஒன்றையும் அவர்கள் சபாநாயகரிடம் கையளித்துள்ளனர். இதில் 24பேர் இணைந்துள்ளதாக அஜித்சிங் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் 20பேர் மட்டுமே இதில் கையொப்பமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அஜித்சிங் சபாநாயகரிடம் சமர்ப்பித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருந்த மூன்று லோக்சபா உறுப்பினர்கள் பின்னர் வி.பி. சிங் சகிதம் சபாநாயகரைச் சந்தித்து தாம் அதிருப்தியாளர் குழுவிற்கு ஆதரவில்லை எனவும் தமது கையொப்பங்கள் மோசடியாக இடப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தனர்.

அத்துடன் அதிருப்தியாளர்கள் வெளியேறியது கட்சி காவல் தடைச் சட்டத்தின் கீழ் செல்லுபடியாகாது என்றும் தெரிவித்துள்ளனர்.

ஆனால் அஜித்தின் தலைமையில் சபாநாயகரை சந்தித்த அதிருப்தியாளர்கள் இதற்கு எதிராக தமது வாதத்தை முன் வைத்துள்ளனர். ''கடந்த தேர்தலில் ஜனதா தள் கட்சி 59 இடங்களில் வெற்றி பெற்றது இ போது 20 உறுப்பினர்கள் எம்முடன் உள்ளார்கள். இது மூன்றில் ஒரு பகுதியாகும். எனவே இதில் சட்ட விரோதமாக அச்சம் எதுவும் இல்லை'' என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜனதா தள் கட்சியின் இப்பிளவிற்கு பிரதமரின் அலுவலகமே காரணம் என்று இக்கட்சியின் தலைமைப் பீடம் குற்றஞ் சாட்டியுள்ளது. ''இந்தப் பிளவு முயற்சியின் பின்னணியில் பிரதமர் நரசிம்மராவ் நேரடியாக சம்பந்தப்பட்டுள்ளார்'' என்று ஜனதா தள் தலைவர்களில் ஒருவரான ஹரி கிஷோ சிங் தெரிவித்துள்ளார். ''ஜனதா தள் கட்சியின் வளர்ச்சியை விரும்பாத பல்வேறு சக்திகளும், கட்சியைப் பலவீனப்படுத்துவதற்காக இவ்வாறான ஒரு முயற்சியில் இறங்கியுள்ளனர்'' என்று வி. பி. சிங் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்தப் பிரச்சினைக்கும் தமக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை என்று காங்கிரஸ் கட்சி திட்டவட்டமாக மறுத்துள்ளது. மற்றைய கட்சிகளிடையே பிளவை ஏற்படுத்துவது எமது நோக்கமல்ல எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# இஸ்ரேலுக்கு உதவ ஜோர்ஜ் புஷ் வற்புறுத்து

(வாஷிங்டன்)

இஸ்ரேலுக்கு 1000 கோடி டாலருக்கான கடன் உத்தரவாதத்தை வழங்க, அங்கீகாரம் அளிக்கும்படி அமெரிக்க காங்கிரசை ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் வலியுறுத்தியதாகத் தெரியவருகிறது.

இஸ்ரேலியப் பிரதமருடன் பேச்சுவார்த்தையை நடாத்திய பின்னரே புஷ் இக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

மேலும் இஸ்ரேலின் புதிய தொழிற்கட்சி அரசாங்கம் அதன் சகல அரபு அயல் நாடுகளுடனும் சமாதானத்தை ஏற்படுத்திக்கொள்ள உறுதி பூண்டுள்ளது என தான் நம்புவதாய் புஷ் குறிப்பிட்டார்.

இக்கடன் உத்தரவாதத்தை இஸ்ரேல் கடந்த ஆண்டு அமெரிக்காவிடம் கோரியிருந்தது

சோவியத் யூனியனில் இருந்தும் வேறு இடங்களில் இருந்தும் இஸ்ரேலுக்கு வருகின்ற 4 லட்சம் யூதர்களை குடியேற்றுவதற்கு ஏற்படும் செலவை ஈடு செய்வதற்காக இந்தக் கடன் உத்தரவாதம் இஸ்ரேலுக்கு தேவைப்படுகின்றது.

அமெரிக்கா உத்தரவாதம் வழங்கினாலே இஸ்ரேல் குறைந்த வட்டியுடன் இலகுவாகக் கடன் பெறக் கூடியதாயிருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# சோமாலியாவிற்கு படைகள்! ஐ.நாவில் வற்புறுத்து

(நியூயோர்க்)

சோமாலியாவினுள் படைகளை அனுப்பவேண்டும் என்று நேற்று முன்தினம் ஐ நாவின் மீது வற்புறுத்தல் மேற்கொள்ளப்பட்டது என தெரிய வருகின்றது

இதே வேளை அங்கு பாதுகாப்புத் தேவைகளை மதிப்பீடு செய்யும் குழு தகவல் தருகையில் பட்டினியால் வாடும் 10 இலட்சம் மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளது.

சோமாலியாவிற்கு உணவு மற்றும் மருந்துப் பொருள் விநியோகத்தை உறுதிப்படுத்தும் முகமாக உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என ஐரோப்பியப் பொருளாதார ஆணைக்குழு கோரியுள்ளது.

### கருணாநிதிக்கு எதிரான விசாரணை

# தமிழக அரசின் பழிவாங்கும் செயல்

ஆனால், இரண்டாம் ஈழப் போர் ஆரம்பமாகிய போது கிழக்கிற்கு முதலில் சென்ற இராணுவத்தினருக்குத் தலைமை தாங்கிச் சென்றவர் டென்சில் கொப்பேகடுவ ஆகும். இதன் மூலம் 'துட்டகைமுனு' எனவும் பாராட்டைப் பெற்றவர். ஆனால், இவர் நடத்திச்சென்ற இராணுவத்தினர் புரிந்த கொலைகளோ 6000 க்கும் மேலாகும். 4000 பேர் பற்றிய தகவல் ஏதுமில்லை. மானபங்கப் படுத்தப்பட்ட தமிழ்ப் பெண்களோ ஏராளம். சூறையாடப்பட்ட தமிழரின் உடைமைகளோ பல கோடி. இந் நிலையில் தான் தமிழரின் நண்பர், இனவாதி அல்லர் என டென்சில் கொப்பேகடுவவிற்கு புகழாரம் சூட்டப்படுகிறது.

மேலும், லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் வழி எனக் கருதினாரெனில் ஏன் வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கைகளுக்குத் திட்டமிட வேண்டும். ஆயிரக்கணக்கில் மக்கள் கொல்லப்படுவார்கள் எனத் தெரிந்தும் ஏன் யாழ்ப்பாணம் மீதான தாக்குதலுக்கு தயாராக வேண்டும். அரசாங்கத்திடம் இராணுவத் தீர்வு சரிப்பட்டுவராது, அரசியல் தீர்வு காணுமாறு வற்புறுத்தியிருக்கலாமே.

ஆனால், உண்மை நிலை அவ்வாறில்லை டென்சில் கொப்பே கடுவவும் தமிழர் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப் பட வேண்டும் எனவே விரும்பினார் இராணுவ வெற்றியின் மீது நின்று கொண்டே அரசியல் தீர்வு பற்றி பேச எண்ணினார். அதாவது தமிழரைச் சமனாக அல்ல, அடிமைகளாகப் பராமரிக்கவே விருப்பம் கொண்டிருந்தார். அதாவது, இன்று தமது அடி வருடிகளாக இருக்கும் தமிழ்க் குழுக்களைப் பராமரிப்பது போன்று முழுத் தமிழரையும் பராமரிக்க எண்ணினார்.

இவ்வாறாக இனப் படுகொலையால் இரத்தம் தோய்ந்து போயுள்ள இவ் இராணுவ அதிகாரிகளுக்குத்தான் அஞ்சலி செலுத்துமாறு தமிழ்க்குழுக்கள் கோருகின்றன; ஒப்பாரி வைக்கின்றன, ஒரு அடிமை, எஜமான் இறந்தால் கண்ணீர் வடிப்பது நியாயமாகலாம். அதற்காக அண்டை வீட்டு எஜமானும் கண்ணீர் வடிக்க வேண்டும் எனக் கோருவது எவ்வளவு மடமை. ஆனால் தனது எஜமானார் விசுவாசத்தை வெளிக்காட்டுவதற்கு அவ் அடிமைகளுக்கு வேறுவழி தெரியவில்லைப் போல் உள்ளது.

எழுதுமட்டுவாள், மந்துவில் ஆகிய இடங்களிலேயே மேற்படி நூல்நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந் நூல் நிலையங்களுக்கான நூல்களைக் கொள்வனவு செய்வதற்காக தென்மராட்சி திகளில் இவ்வாறான நூல் நிலையங்களை ஆரம்பிக்குமிடத்து வேண்டிய உதவிகள் செய்துகொடுக்கப்படும் எனவும் தென்மராட்சி பிரதேச சபை செயலாளர் தெரிவித்துள்ளார். (35)

## இராணுவ பிரமாணங்களில் மாற்றம் செய்ய முடிவு

இராணுவ அதிகாரிகள் சேவைப் பிரமாணங்களுக்குப் பதிலாக புதிய பிரமாணங்கள் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என சிறிலங்கா அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை கொழும்பு கிராமோதய நிலையத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இதனை அவர் தெரிவித்தார்.

சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்த சிபாரிசுகளுக்கு அமைய அமைச்சரவை இவற்றை அங்கீகரித்துள்ளது என்றும்,

ராணுவத்தில் தற்போதைய தேவைகளுக்கேற்றவாறு ராணுவத்தளபதி இந்தப் பிரமாணங்களை தயாரித்துள்ளார் என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

## சூழல் பாதுகாப்பு வாசகப் போட்டி முடிவுகள்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தின் சூழல் பாதுகாப்புப் பகுதியினால் நடாத்தப்பட்ட சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு வாசகப் போட்டியில் கலந்து கொண்டவர்களில் பரிசுக்குரியவர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் விபரங்கள் வெளியிடப் பட்டுள்ளன.

க. சுமதி 48/5ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். கு. காந்தன் இல 20 தொடர்மாடி குருநகர் யாழ்ப்பாணம். கா. பிரேமசுதா வத்திராயன் வடக்கு, தாளையடி. நா. விக்கினேஸ்வரன் 36 புறாடி ஒழுங்கை யாழ்ப்பாணம். ந. கிருஷ்ணபவன் நல்லாயன் வீதி, ஜெயபுரம்-பல்லவராயன்கட்டு, பூநகரி. த.ரேணுகா பிள்ளையார் கோவிலடி இமையாணன் மற்கு உடுப்பிட்டி. வை. வைதேகி கட்டைப்பிராய், யாழ்ப்பாணம். ச. கெங்காதரன் அச்சுவேலி. வடக்கு அச்சுவேலி. வே. ஸ்ரீகுலறஜனி ஏரந்தனை. புத்தூர் வடக்கு, புத்தூர். க. இளமதி கலைமணி ஒழுங்கை, கட்டைப்பிராய் கல்வியங்காடு. இவர்களுக்கான பரிசளிப்புவைபவம் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சூழல் மாசடைதல், காடழித்தல்நீர்ப்பயன்பாடு தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக, சூழல்பாதுகாப்புவிழிப்புணர்வு வாசகப்போட்டி நடத்தப்பட்டது. மேலும்தமிழீழபொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் சூழல் பாதுகாப்பு பகுதி காடு வளர்ப்புத் திட்டங்களையும் வீதியோர மரநடுகை முயற்சிகளிலும் ஈடுபட்டு வருவதும் ப்இங்கு குறிப்பிடத்தக்து.

## எதிர்க் கட்சிகள் கண்டனம்

கருணாநிதிக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க தமிழக அரசு விசாரணைக் கமிசன் அமைந்திருப்பது அரசியல் வஞ்சம் தீர்க்கும் செயலாகும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒரு அறிக்கையில் கூறியுள்ளது. இக்கட்சியின் தமிழக மாநிலக் குழுவின் செயலாளர் நல்ல கண்ணு இதுபற்றி வெளியிட்டிருக்கும்அறிக்கையில்;மேலும் தமிழக அரசு பழிவாங்கும் அரசியல் போக்கை கைவிட்டு நாகரிகமான அரசியல் நத்தும் வழிவகைகளை காண வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

அத்துடன் முதலமைச்சர் ஜெயலலிதா மீதும், அவரது அமைச்சரவைசகாக்கள் மீதும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படும் சூழலிலும், மாணவர் போராட்டங்கள். ஆசிரியர் வேலை நிறுத்தம் என்பவை நடைபெறும் போதும் இந்த விசாரணை கமிசன் அமைக்கப்பட்டிருப்பது திசைதிருப்பும் செயலாக்கும் என்று மார்க்சிச கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழக மாநிலக் குழு கூறியுள்ளது.

ஆனால் கருணாநிதியும் அவரது குடும்ப உறுப்பினர்களும் புரிந்ததாகக் கூறப்படும் ஊழல்கள் பற்றி விசாரிக்க விசாரணைக்கமிசன்நியமிக்கப்பட்டது தாமதமாக எடுத்த முடிவாயினும் வரவேற்க வேண்டியது என்று கூறியுள்ள தமிழக இந்திரா காங்கிரஸ் கட்சித்தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி தமது கட்சி முழு ஒத்துழைப்பும் வழங்கும் எனக்கூறியுள்ளார்.

### பொஸ்னியாவிற்கு அவசர உதவி

## இராணுவத்தைப் பயன்படுத்த அமெரிக்காவிற்கு அனுமதி

(நியூயோர்க்)

பொஸ்னியத் தலைநகர், சரஜீவோவில் பட்டினிச் சாவுகளைத் தடுக்கும் விதத்தில் அவசர உதவிகளை அனுப்ப துருப்புக்களை பயன்படுத்த அமெரிக்காவிற்கு ஐ நா.பாதுகாப்புச் சபை அனுமதி அளித்துள்ளது.

மேற்கு நாடுகளான அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், பெல்ஜியம் ஆகிய நாடுகள் இணைந்து ஐ.நா. தீர்மானமொன்றைக் கொண்டு வர வேண்டும் எனக்கோரியிருந்தன.

இதன் பிரகாரம் ஐ நா. சபை அமெரிக்காவிற்கு இதற்கான அனுமதியினை வழங்கியது.

இதேநேரம் பொஸ்னியா-ஹெர்சகோவினாவின் பல பகுதிகளிலும் முஸ்லிம்கள், செர்பியர்கள் மற்றும் குரோஷியர்களுக் கிடையிலான சண்டை உக்கிரமடைந்து வருகிறது. தலைநகரான சரஜிவோ குண்டுத் தாக்குதல்களால் அதிர்ந்த வண்ணம் உள்ளதாகவும்,

மாலைப்பொழுது நெருங்கியவுடன் சரஜீவோவில் குண்டு மழை பெய்ய ஆரம்பித்தாகவும்,

சரஜிவோ கட்டடங்கள் பலவற்றின் உள்ளிருந்து மக்கள் கூக்குரலிடும் ஓசைகள் இரவு முழுவதும் கேட்ட வண்ணம் இருக்கும் என்றும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. முன்னாள் யூகோஸ்லாவிய குடியரசில் இடம்பெற்ற இத்தாக்குதலில் எத்தனை பேர் உயிரிழந்தனர் என்ற விபரம் வெளியிடப்படவில்லை. ஆயினும் சமீபத்தில் நடந்த சண்டைகளில் ஆயிரக்கணக்கானோர் இறந்திருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது

இதேவேளை சரஜீவோவில் மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த பாண் இனி வழங்குவதற்கு முடியாதிருக்குமென கூறப்படுகிறது பேக்கரிகளில் பாண் தயாரிக்க கோதுமை மா இல்லாதிருப்பதாக பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

### மூடப்படும்

ஐரோப்பாவில் இருக்கும் அறுபத்தொன்பது இராணுவத் தளங்களையும், தென் கொரியாவில் ஒரு இராணுவக் களத்தையும் மூடிவிட அமெரிக்க அரசாங்கம்முடிவுசெய்துள்ளது

வாஷிங்டனில் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சகம் நேற்று முன்தினம் இதனை அறிவித்துள்ளது.

ஈழநாதம்

# விசாரணை குழுவிற்கு காரணம் அரசியல் காழ்ப்பு உணர்ச்சியே

## கருணாநிதி கண்டனம்

(சென்னை)

தமிழக அரசு தமக்கும் தமது குடும்பத்தினருக்கும் எதிராக விசாரணைக் குழுவை அமைத்திருப்பது அரசியல் உள்நோக்கமும், காழ்ப்பு உணர்ச்சியும் கொண்டது என்று தமிழக முன்னாள் முதலமைச்சரும், தி. மு. க. தலைவருமான மு. கருணாநிதி கூறியிருக்கிறார்.

சென்னையில் நேற்றுச் செய்தியாளரிடம் பேசிய அவர், தமிழகத்தில் வழிப்பறி, கொலை, கொள்ளை, நாட்டு வெடிகுண்டு வீச்சு போன்ற நடவடிக்கைகள் பரவலாக நடைபெற்று சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்து உள்ளது என்றும்-

அவற்றிலிருந்து மக்களின் கவனத்தைத் திருப்பவே இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்றும் அவர் கூறினார்.

எதிர்க் கட்சிகள் மீது பழி சுமத்தி ஊழலுக்கு உள்ளாகியிருக்கும் ஜெயலலிதா அரசு தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறது என்றும் அவர்கூறினார்.

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மீது பல்வேறு ஊழல்குற்றச் சாட்டுகளைச் சுமத்தியதுடன், அவற்றிற்காக ஜெயலலிதா மீது வழக்குத் தொடர மாநில ஆளுநரின் அனுமதியை நாடப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

கூட்டுத்துறை நிறுவன விவகாரத்திலும் சிறிராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியைத் தனியாருக்குக் கொடுத்ததிலும், பஸ்வரி குறைத்ததிலும், ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளுக்கு அங்கீகாரம் வழங்குவதிலும், மதுக்கடைகளை வழங்குவதிலும் முறைகேடுகள் இடம்பெற்று கோடிக்கணக்கான ரூபா அளவிற்கு ஊழல் நடந்திருப்பதாக அவர் செல்வி ஜெயலலிதா மீது குற்றம் சாட்டினார்.

மதுரை அ. இ. அ. தி. மு. க. மாநாட்டில் அரசு அதிகாரம் தவறாகப் பயன்படுத்தப்பட்டுக் கட்டாயபணவசூல் நடந்ததாகவும் அரிசியாலை முதலாளிகளிடம் அந்தக்கட்சி பலவந்தமாகப் பணம் பெற்றதாகவும் மு. கருணாநிதி குற்றம் சாட்டினார். தமிழக அரசுக்கு எதிராக மக்களிடையே ஒரு மௌனப் புரட்சி நடப்பதாகவும் அவர் கூறினார்.

தமிழக அரசு வழக்கறிஞராக இப்போது உச்ச நீதிமன்றில் பணியாற்றும் ஓய்வு பெற்ற நீதிபதி சிவசுப்பிரமணியத்தை விசாரணைக் குழுவின் தலைவராக நியமித்திருப்பது முறையற்றது என்றும் கருணாநிதிசுட்டிக்காட்டினார்

## பேருரை

''தமிழரின் மொழி, கலை, பண்பாடுகளுடன் ஜப்பானியர் கொண்டுள்ள இசைவாக்கம் ஒரு கள ஆய்வு என்னும்'' பொருள் பற்றிய ஆய்வுப் பேருரை ஒன்று இன்று மாலை 3.30 மணியளவில் யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற உள்ளது. தமிழீழக் கல்வி மேம்பாட்டுப்பேரவை ஒழுங்கு செய்துள்ள இக் கருத்தரங்கில் ஜப்பான் கக்சுயின் பல்கலைக்கழக மொழியாய்வு நிறுவன ஆய்வுப் பேராசிரியை திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் கருத்துரையாற்றுவார்.

# நாடகப் பயிற்சிப் பட்டறை வடமராட்சியில் ஆரம்பம்

(நமது நிருபர்)

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் வடமராட்சிப் பிரிவு வடமராட்சியில் நாடகப் பயிற்சிப் பட்டறை ஒன்றை நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

நாடகக் கலைஞர்களை ஊக்குவிக்குமுகமாகவும், புதிய கலைஞர்களை தோற்றுவிக்குமுகமாகவும் மேற்படி நாடகப் பயிற்சிப் பட்டறை நடத்தப்படவுள்ளதாகவும்.

நாடகத்துறையில் ஆர்வம் கொண்ட ஆண், பெண் இருபாலாரும் கலந்து கொள்ள...

சிறந்த பயிற்சியாளர்கள் கலை நெறியாளர்கள், ஒப்பனையாளர்களைக் கொண்டு இந்தப் பயிற்சிப்பட்டறை நடத்தப்படவுள்ளதாகவும்.

இந்தப் பட்டறையில்கலந்து கொள்ளவிரும்புவோர் இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் பொறுப்பாளர், விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக்கழகம் வடமராட்சி, வதிரீ என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறும் வடமராட்சி விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர்...

## ஆலோசனைக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

வேலணைக்கோட்ட அதிபர்கள் சேவைக்கால ஆலோசகர்கள் கூட்டம் வரும் புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ் சென் ஜோன்ஸ் அக்கடமியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் வேலணைக் கோட்டக் கொத்தணிகளில் உள்ள சகல அதிபர்களையும் சேவைக்கால ஆலோசகர்களையும் கலந்து கொள்ளுமாறு வேலணைக்கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. புலேந்திரனின் செய்திக் குறிப்பொன்று கேட்டுக்கொள்கிறது. இக்கூட்டத்தில் யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளரும் கலந்து கொள்வார்.

## தற்கொலையில் இரண்டாமிடம்

[கொழும்பு]

உலகில் தற்கொலைசெய்து கொள்பவர்களில் இலங்கை இரண்டாம் இடத்தை வகிப்பதாகவும், இலங்கைக்குள் மாவட்ட அடிப்படையில் வவுனியா முதலிடத்தை வகிப்பதாகவும் ஆய்வு ஒன்றின் மூலம் தெரிய வந்துள்ளது. மார்கா ஆய்வு நிறுவனம் வெளியிட்ட தகவல் ஒன்றில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புளொட் ஒருவர் பலி

வவுனியா நொச்சிமோட்டைப் பகுதியில் புலிகள் இயக்கத்தினருக்கும் புளொட் குழுவினருக்குமிடையே இடம் பெற்ற மோதலில் புளொட் குழுவைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதாகவும், மற்றுமிருவர் காயமடைந்ததாகவும், புளொட் குழுவினர் கூறியுள்ளனர்.

## விண்ணப்ப முடிவு நீடிப்பு

(கொழும்பு)

அரசாங்க எழுதுவினைஞர் மற்றும் அரசாங்க சேவைக்கான விண்ணப்ப முடிவு திகதி ஆகஸ்ட் ஏழாம் திகதியிலிருந்து ஆகஸ்ட் முப்பத்தோராம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது தகவல் துறையின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் யூ. பி. தென்னக்கோன் இத் தகவலை அறிவித்துள்ளார்.

## இன்று கப்பல் புறப்படும்

(யாழ்ப்பாணம்)

கப்பல் மூலம் தபால்கள் நாளை கொண்டு செல்லப்படவுள்ளதால் வெளியூர் தபால்களை அனுப்ப விரும்புவோர் இன்று மாலை 5 00 மணிக்கு முன் யாழ். தபால் பெட்டிகளில் தபால்களைச் சேர்க்குமாறு தபால் அத்தியட்சகர்...

# சிதம்பரம் வாங்கிய பங்குகள் ஒருவகையான லஞ்சமே

## -வாழப்பாடி ராமமூர்த்தி

(சென்னை)

அமைச்சர்ப் பதவியைச் சிதம்பரம் ராஜினாமாச் செய்தது சரியே என்றும் அதற்கான காரணத்தை அவரே கூறியுள்ளார் என்றும் தமிழ் நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி கூறியுள்ளார்.

சிதம்பரம் வாங்கிய பங்கு பத்து ரூபா சந்தை விலை எண்ணாயிரம் ரூபா என்று சிலர் கூறுகிறார்கள் பிறிம்றோஸ் நிறுவனத்தினர் சில சலுகைகளை எதிர்பார்த்தே இவ்வாறு அமைச்சருக்குச் செய்திருக்கவேண்டும் என்றும் இது ஒருவகையான லஞ்சமே என்றும் வாழப்பாடி கூறியுள்ளார்.

இது பற்றிப் பாராளுமன்றக் குழு ஒன்று விசாரணை செய்ய உள்ளதென்றும் ஆகவே சிதம்பரம் லஞ்சம் வாங்கியதாகவே அர்த்தப்படுகிறது என்று வாழப்பாடி ராமமூர்த்தி குறிப்பிட்டார்.

# எழுதுவினைஞர் நியமனம்; வாக்குறுதிப்படி வழங்கவில்லை

## அரச அதிபருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ் செயலக விளம்பரப் பலகையிலும், உள்ளூர் தினசரிகளிலும் எமக்கு எழுதுவினைஞர் நியமனங்கள் அரசசேவையில் வழங்கப்படும் என்று தகவல் கொடுக்கப்பட்டிருந்தது ஆனால் கூறியபடி எமக்கு நியமனங்கள் வழங்கப்படவில்லை என்று இந்த வெற்றிடங்களுக்கு விண்ணப்பித்த சிலர் கையெழுந்திட்டு யாழ். அரச அதிபருக்கு ஆட்சேபம் தெரிவித்து மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

அந்த மகஜரில் 304 விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரியப்படுத்தியிருந்தபோதிலும் 155 பேருக்கே நியமனங்கள் தரப்பட்டன எம்மில் சிலர் உங்களைச் சந்தித்த சமயம் விளம்பரப்பலகையில் உள்ளபடி 304 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் என்பதை நீங்கள் ஒப்புக்கொண்டீர்கள் என்றும்,

பொது எழுதுவினைஞர் சேவைக்கு ஆள் சேர்ப்பதற்கு அறவிடப்படும் கட்டணமே எம்மிடமும் அறவிடப்பட்டது. ஆகவே, பொது எழுதுவினைஞர் சேவைக்கு ஆள் சேர்ப்பதுபோன்ற ஒழுங்கிற்கமைய நாமும் சேர்க்கப்படுவோம் என்று எதிர்பார்த்தோம் ஆனால் அப்படி நடைபெறவில்லை. ஒருபோட்டிப் பரீட்சைக்கும் தோற்றினோம் என்றும்,

ஆனால், இன்னுமொரு பரீட்சைக்கு நாம் மீளவும் தோற்ற வேண்டும் என்ற அறிவுறுத்தல் எமக்குப் பெரும் அதிர்ச்சியினைத் தந்துள்ளது இது அடிப்படை மனிதஉரிமை மீறலாகும். யாழ்ப்பாணத்தில் நிறைய வெற்றிடங்கள் இருப்பதால் அந்த இடங்களுக்கு எம்மை நியமிக்கும்படி கோருகிறோம் என்று கூறப்பட்டுள்ளது.

# பயிலுனர் ஆசிரியர்களுக்கு 100 ரூபா படி வழங்கப்படும்

(கொழும்பு)

1992 ஜனவரி மாதத்திலிருந்து வழங்கப்பட்ட 100 ரூபா படி பயிலுனர் ஆசிரியர்களுக்கும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் நிலுவையுடன் இந்த நூறு ரூபா படியை பெறுவார்கள்.

பயிலுனர் ஆசிரியர்களுக்கு ஆரம்பத்தில் மாதந்தம் 1000 ரூபாவழங்கப்பட்டது. பின்னர் மேலதிகமாக 300 ரூபா வழங்கப்பட்டது. பின்னர் 100 ரூபா அதிகரிப்பு வழங்கப்பட்டு இந்தப் பணம் அவர்களது சேமிப்புக் கணக்கில் இடப்பட்டது.

இப்பொழுது வழங்கப்படும் 100 ரூபா படியுடன் மாதந்தப்படியாக 1500 ரூபா கிடைக்கும என தெரிவிக்கப்படுகிறது

## புலிகளின்

பதினைந்து புலிகள் ஊடுருவி பெரிய தாக்குதல்களை நடாத்தியிருந்தனர் இதற்கு சான்றாக நெல்லியடி இராணுவ முகாமை புலிகள் கைப்பற்றிய சம்பவத்தைக் குறிப்பிடலாம்

எந்தவொரு பகுதியிலும் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளலாம் ஆனால் தொடர்ச்சியாக இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது கடினம் என்பதை விடுதலைப்புலிகள் 1987 ஆம் ஆண்டுக் காலப்பகுதியிலேயே உணர்ந்திருந்தனர்.

தொடர்ந்து பதவிக்கு வந்த அரசை விடுதலைப்புலிகள் ஏமாற்றி இந்திய இராணுவத்தை வெளியேற்றினர். இதன் மூலம் எமது அரசியல் இராஜதந்திரத்தைவிடுதலைப் புலிகள் கச்சிதமாக வெற்றி கொண்டு விட்டனர்.

தீவகத்தில் நடைபெற்ற கண்ணி வெடித்தாக்குதலில் பத்து இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்ட பின்னர் அரசு நடந்துகொண்ட விதம் குறித்து கேட்கப்பட்டபோது நான் தற்போது அரசியலில் ஈடுபட விரும்பவில்லை என்றும் இவ்விடயம் குறித்து கருத்துக் கூறவோ அன்றி ஆலோசனை கூறவோ தான் விரும்பவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## ராணுவச்

கப்படுகிறது எனக்கூறிய அந்த அதிகாரி இதுவரை பாதுகாப்புக்கென எவ்வளவு செலவிடப்பட்டது என்பதைக் கூறவில்லை.

## விரைவில்

கிழக்கு மாகாணத்திற்கு நியமனம் பெற்றுள்ள பிரிகேடியர் லக்கி அல்கம 52 வயதுடையவரும், பகிஸ்தான் இராணுவ பாதுகாப்பு அக்கடமியில்பட்டம்பெற்றவருமாவார்

இதேவேளை கண்ணிவெடியில் கொல்லப்பட்ட உயர் இராணுவ அதிகாரிகளின் பதவிகளுக்கு இரு கடும்போக்கு இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளமை அரசு விடு...

# அரச அதிகாரிகளின் வாகன துஷ்பிரயோகம்

சலுகை அடிப்படையில் அரச அதிகாரிகளுக்காக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவது கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து. பொது நிர்வாக அமைச்சு நடவடிக்கைஎடுக்க முடிவு செய்துள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக அமைச்சு சுற்றறிக்கை ஒன்றை விடுத்துள்ளது அதன் பிரகாரம், சலுகை அடிப்படையில் உத்தியோகத்தர்களின் பெயரில் இறக்குமதி செய்யப்படும் இந்த வாகனங்கள் கடன் தொகை முழுமையாக செலுத்தப்பட முன்பு உரிமை மாற்றம் செய்யப்பட்டால் குறிப்படுத்தக் கூடாது.

வாகன தொகை ஐந்து வருட காலத்திற்குள் திருப்பிச் செலுத்தப்பட்ட பின்பே, அரசவாகனங்களை தமது உத்தியோகபூர்வ பணிகளுக்குப் பயன்படுத்தலாம்.

மேற்படி ஐந்து வருட காலமும், வாகனம் அரச பெயரில் ஈட்டில் இருப்பதாகவே கருதப்படும்.

## கொப்பேகடுவ

கொப்பேகடுவவின் இறுதிக் கிரியைகள் பொரளை கனத்தை மயானத்தில் நடைபெற்றபோது அந்த மயானத்தின் மதில் சுவர் இடிந்து...

நாடகத்துறையில் ஆர்வம் கொண்ட ஆண், பெண் இருபாலாரும் கலந்து கொள்ளலாம் என்றும்.

தலைப்புலிகள் கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் பாஸ்கரன்கேட்டுள்ளார்.

# மருந்துக் கலவையாளருக்கு 5 நாள் வேலைத்திட்டம்

அரசாங்க வைத்திய சாலைகளில் கடமையாற்றும் மருந்துக்கலவையாளர்களுக்கு வாரத்தில் ஐந்து நாட்கள் கடமையாற்றும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது என்றும் சனி, ஞாயிறுதினங்களில் அவர்கள் கடமையாற்றுவதற்கு விசேட படி(அலவன்ஸ்) வழங்குவது என்றும் கொழும்பிலுள்ள சுகாதார-மகளிர் விவகார அமைச்சு தீர்மானித்துள்ளது. இது பற்றிய சுற்று நிருபம் ஒன்று கடந்த வாரம் சகல பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளர் பணிமனைகளுக்கும் சுகாதார,மகளிர் விவகார அமைச்சின் செயலாளரினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. தொழில் நுட்ப வியலாளர் தரத்திலுள்ள மருந்துக் கலவையாளர்களுக்கு சனிக்கிழமைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் கடமையாற்றுவதற்கு அவர்களின் அடிப்படை மாதச் சம்பளத்தில் 1/20 வீதத்தை படியாக வழங்கப்பட வேண்டும் என்றும் மேற்படி சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது ஐந்து நாள் வேலைத்திட்டத்தை மருந்துக் கலவையாளர்களுக்கு நடைமுறைப்படுத்துமாறும், சனி, ஞாயிறு தினங்களில் கடமையாற்றுவதற்கு விசேட படி வழங்கபபடவேண்டும் என்றும் அரசாங்க மருந்துக் கலவையாளர்கள் (டிஸ்ப்பென்சர்கள்) சங்கம் சுகாதார அமைச்சிடம் நீண்டகாலமாக கோரிக்கை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ச)


**இந்த இடம்** உங்கள் தாகத்தை

நிச்சயமாக பூர்த்தி செய்யும் ஒரு

பொருளை அறிமுகப்படுத்தப் போகின்றது

நாளை வரை சற்றுப் பொறுமையைக்

கையாளுங்கள்

நாளை இந்த இடத்தைக் கவனியுங்கள்!

விளம்பர அமைப்பு

செனித் ஜோ. எக்...

(3019)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


முன் யாழ். தபால் பெட்டிகளில் தபால்களைச் சேர்க்குமாறு தபால் அத்தியட்சகர் கேட்டுள்ளார் (ச)

## சுட்டிலக்கங்களை பெற்றுக் கொள்ளவும்

தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளியால் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு விண்ணப்பித்துப் போர் நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்த மாணவர்களை 22 08. 1992 சனிக்கிழமை காலை 9 00 மணிக்கு மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் சுட்டிலக்கங்களைப் பெற்றுச் செல்லுமாறு அதிபர் கேட்டுள்ளார்.

## பயிற்சிக்க நத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பிராந்திய சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் பிரதி நிதிகளுக்கான கூட்டுறவுப் பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று இன்று நடைபெற உள்ளது

காலை 9.00 மணிக்கு இலக்கம் 14 இல் அமைந்துள்ள கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெற உள்ள இப் பயிறசிக் கருத்தரங்கை யாழ். கூட்டுறவுச்சபையின் ஆதரவில் யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஒழுங்கு செய்திருக்கிறது. (24)

## தென்னிலங்கை

இனரீதியான பதற்றம் காணப்பட்டாலும் ஒப்பீட்டு அடிப்படையில் அமைதி நிலவுவதாக பொலிசார் கூறுகின்றனர்.

மலையகப் பகுதிகளிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் எனினும் கலவரத்தை தூண்டக்கூடிய எந்தச் சம்பவமும் இதுவரை இடம்பெறவில்லை என்று நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

தொகை முழுமையாக செலுத்தப்பட முன்பு உரிமை மாற்றம் செய்யப்பட்டால் குறிப்பிட்ட வாகனங்கள் அரசால் பறிமுதல் செய்யப்படும்.

வாகனம் இறக்குமதி செய்யப்பட்டு ஐந்து வருட காலத்திற்கு வாகனம் இறக்குமதி செய்த பணியாளர் அவ் வாகனத்தையன்றி அரச வாகனங்களைத் தமது உத்தியோக பூர்வ பணிகளுக்குப் பயன்

பெற்றபோது அந்த மயானத்தின் மதில் சுவர் இடிந்து விழுந்ததும் அமைச்சர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள சிலர் கல்வீச்சிற்த இலக்கானதும் தெரிந்ததே இச்சம்பவத்தில் பொலிசாருக்கு சொந்தமான ஒரு பஸ், இரண்டு டிரக், மூன்று மோட்டார் சைக்கிள்கள் உட்பட பல வாகனங்கள் தீயிட்டு எரிக்கப்பட்டதும் வாசகர்கள் அறிந்ததே.

## மைலந்தனை

ளாக இருக்கவேண்டும் என தெரியவருகிறது.

மைலந்தனையில் கொலையுண்ட 24 பேரின் விபரங்கள் புனர்வாழ்வு அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கருப்பையா குமுதினி(வயது 8), கருப்பையா விஜயராணி (வயது 2), கருப்பையா ரகுநாதன் (வயது 4), ராமையா மயில்வாகனம் (வயது 49), பேபிநோனா மயில்வாகனம் (வயது 32), மயில்வாகனம் மகேஸ்வரி (வயது 2), மாணிக்கன் அப்புக்குட்டி (வயது 42), விஜயலட்சுமி அப்புக்குட்டி (வயது 37), அப்புக்குட்டி லோகசாமி வயது 17), அப்புக்குட்டி விஜிதா(வயது 14), அப்புக்குட்டி சுதாகர் (வயது 9), முத்துவேல் சின்னம்மா (வயது 60),ஆண்டியப்புலில்லிநோனா (வயது 37), ஆண்டியப்பு தங்கலட்சுமி (வயது 9), தம்பிப்போடி சுப்பிரமணியம் (வயது 30), சுப்பிரமணியம் கிருஷ்ண பிள்ளை (வயது 12), சுப்பிரமணியம் சந்திரமதி (வயது 8), கந்தசாமி மாதவி (வயது 33), வைரமுத்து கோமேரி (வயது 20),வைரமுத்து திலகரட்ணம் (வயது 31), சின்னத்தம்பி வைரமுத்து(வயது70),தாவீது வைரமுத்து(வயது71), இராசமணி ரவிக்குமார் (வயது 7),

காணாமல் போனோர் விபரம்:

அப்புக்குட்டி இதயராணி (வயது 10), பொன்னையா குமரையா (வயது 52), குமரையா தவமோகன்(வயது29), அருணாசலம் சிவம்மா (வயது 35), நல்லசேகரன் நல்லம்மா (வயது 27), யோகராஜா ராதிகா (வயது 4), யோகராஜா விஜயன் (வயது 1), ராசமணி ரகுநாதன் [வயது 15],ராசமணி சந்திரன்(வயது 7), பொன்னையா கனகசபை (வயது 60).

இச் சம்பவத்தில் படுகாயமடைந்தோர் விபரம்;

திலகரட்ணம் கோகிலா (வயது 25), பிள்ளையின் ராஜமணி (வயது 43), சொக்கலிங்கம் சுப்பிரமணியம் (வயது 36), நல்லதம்பி தங்கப்பிள்ளை (வயது 72), தியாகராஜா சிவமலர் (வயது 30), தியாகராஜா ராதா (வயது 08), தியாகராஜா லதா (வயது 01), தாவீது சிறினீவாசகன் (வயது 04), கருப்பையா மாரியம்மா (வயது 25)

மைலந்தனை கிராமத்தில் 36 தமிழ்க் குடும்பங்களே வசித்து வந்தன. அவர்களில் சுமார் அரைவாசிப் பேர் 1983 இல் இடம் பெயர்ந்த இந்திய வம்சாவழியினர் என்றும், ஏனையோர் வாழைச்சேனைப் பகுதியில் இருந்து வந்து விவசாயம் செய்வதற்கா குடியேறியவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு மாத கால கட்டத்தில் சங்கிலித் தொடர் போல் இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இது போன்ற சம்பவங்களில் இதுமூன்றாவது கோரக் கொலையாகும் என்றும்

பட்டது என்பதைக் கூறவில்லை.

அத்துடன் இந்தியாவில் இருந்து திரும்பும் இலங்கைத் தமிழ் அகதிகளை பராமரிப்பதற்கான செலவினங்களுக்கு இதுவரை நிதி ஒதுக்கப்படவில்லை. இதற்கென பணத்தைத்தேடவேண்டியிருக்கிறது என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். இதுவரை 23,000 அகதிகள் இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பியிருக்கிறார்கள்.

இந்தியாவிலிருந்து திரும்பும் அகதிகளைப் பராமரிக்க ஆறு கோடி அறுபது இலட்சம் ரூபாய் தேவைப்படுவதாகப் புனர்வாழ்வு அமைச்சு கூறுகிறது. உள் நாட்டில் இடம் பெயர்ந்த பத்து இலட்சம் அகதிகளுக்கான பராமரிப்புச் செலவில் இருந்து இது வேறுபட்டதாகும். புனர்வாழ்வுத் திட்டங்களுக்கு மொத்தம் பத்து இலட்சம் அமெரிக்க டொலர்களை தருவதாக அமெரிக்கா, கனடா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் உறுதியளித்திருப்பதாகவும் அமைச்சு கூறியுள்ளது.

ஜனசவிய மற்றும் பாடசாலை பிள்ளைகளுக்கு இலவச சீருடை வழங்கல் போன்ற அரசியல் நோக்குடைய நலன் புரித் திட்டங்களினால் திறைசேரிக்கு மேலதிக சுமைகள் ஏற்படுகின்றன. இதற்கென முந்நூறு தொடக்கம் நாநூறு கோடி ரூபாய் தேவைப்படுகின்றது.

இதை எங்கிருந்து பெறுவதென்பது தெரியவில்லை. சிகரெட் மற்றும் மது வகைகள் மீதான வரியை அதிகரித்ததன் மூலமாக மேலதிக வருவாயைப் பெற்று வீழ்ச்சியைச் சரிக்கட்ட அரசாங்கம் முயற்சிக்கின்ற போதிலும் 1992க்கான வரவு செலவுத் திட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட பதினையாயிரத்து அறுநூற்றி அறுபது கோடி ரூபாவைவிட செலவு அதிகமாகும் என்றும் அதிகாரி கூறினார்.

இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளமை அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடத்திவரும் போரில் கடுமையான இராணுவ நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கின்றது என்பதையே காட்டுகின்றது என்று பி.பி சி அதன் செய்திக்குறிப்பில்தெரிவித்தது

வடபகுதி இராணுவ நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்க மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா (51) நியமிக்கப்பட்டுள்ளார். கிழக்கு மாகாண இராணுவ நடவடிக்கைக்குப் பொறுப்பாகபிரிகேடியர் லக்கி அல்கம (52) நியமிக்கப்பட்டுள்ளார் இந்த இருவருமே இராணுவத் தீர்வை விரும்புகிறவர்கள்.

மேஜர் ஜெனரல் ஜெரி சில்வாவுக்குப் பதிலாகக் கிழக்கு மாகாணப்பொறுப்பை ஏற்கும் லக்கி அல்கம அவர்கள் கடும் போக்காளர் எனப்பெயர்பெற்றவர் அவர் முக்கியமாகத் தெற்கில் ஜே.வி.பிகிளர்ச்சியாளரைக்கையாள்வதில்கடுமைப் போக்கைக்காட்டியவர் என்று பெயர் எடுத்தவர் ஜே. வி. பி பூண்டோடு அழிக்கப்பட்டதற்கு இவரே பொறுப்பு என கருதப்படுகின்றது ஜே வி பியினரைக் கையாள்வதில இவர் காட்டியஈவிரக்கமற்றகடுமைப் போக்கு சிங்கள மக்கள் மத்தியில் இவரின் பெயர் திகிலை ஏற்படுத்தியதாகக் கூறப்படுகின்றது என பி பி சி மேலும் தெரிவித்தது

## இரவு

(வயது 14), இ. சிறீவரதன் (வயது 24), இ. இராசகுலசிங்கம் (வயது 34) ஆகியோரும் காயமடைந்துள்ளனர்.

## பெருமளவு

மக்கள் இரவோடு இரவாக இடம் பெயர்ந்து சென்றதை அவதானிக்க முடிந்தது யாழ். நகர பாதுகாபு வலயத்திற்குள்ளும் அதிகளவு மக்கள் நேற்று இரவு முழுவதும் தங்கியிருந்தனர். (க)